இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 28-09-2025

# அரசின் குழந்தைகள்!

நான்கு ஆண்டுகால நல்லாட்சியின் சாட்சியாக அமைந்திருந்தது அந்த நிகழ்ச்சி!

‘கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ என்ற முகப்பின் கீழ் தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கெடுத்துப் பேசிய மாணவ, மாணவியர் அனைவரும் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை மனந்திறந்து பாராட்டினார்கள்.

ஒவ்வொருவரும் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி - அரசின் திட்டங்களின் பயனைப் பற்றிச் சொல்லும் போது - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் முகத்தில் பெருமிதம் பொங்கியது. ‘உங்கள் பேச்சைக் கேட்கும்போது நான் உணர்ச்சிவசப் பட்டேன்’ என்று சொன்னார் முதலமைச்சர் அவர்கள்.

**மாணவ, மாணவியர் கண்கலங்கிச் சொன்னார்கள் என்றால் அது கேட்பவர் பலரையும் அழ வைத்தது. கண்கலங்க வைத்தது. அரசின் ஊக்கத்தொகை மூலமாக தைவான் நாட்டில் படிக்கும் முகம்மது யாசினின் தாயார் நூர்ஜகான், “தந்தையை இழந்த என் மகன் முகமது யாசின், என் குழந்தை என்று சொல்வதைவிட தமிழ்நாடு அரசின் குழந்தை என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும்” என்றார். இதைவிட பெருமைச் சொல் என்ன இருக்க முடியும்?**

“என் மகள் இன்று இருக்கும் நிலையை நான் கனவில்கூட நினைத்தது இல்லை. இப்படிப்பட்ட முதலமைச்சருக்கு நான் நன்றி தெரிவிக்கவில்லை என்றால் ஒரு தந்தையாக இருக்கவே தகுதி இல்லாதவன் ஆவேன்” என்றார் அரசு ஊக்கத்தொகை மூலமாக மலேசியாவில் கல்வி பயிலும் சுப்ரீ என்ற மாணவியின் தந்தையான வெங்கடேசன். தனது முதல் சம்பளத்தை தனது தந்தையிடம் மேடையில் வைத்துத் தந்தார் மாணவி பிரேமா. அவரைப் படிக்க அனுப்பவேண்டாம் என்று உறவினர் சொன்னதைமீறி அனுப்பிவைத்திருக்கிறார் பிரேமாவின் தந்தை.

‘நான் இஸ்ரோவில் பணியாற்றுவேன்’ என்றான் விஷ்ணு என்ற மாணவன். ‘நான் கொரியா செல்ல இருக்கிறேன்’ என்றான் இன்னொரு மாணவன்.

‘புதுமைப் பெண்’ திட்டத்தால் மாதம் ஆயிரம் ரூபாய் பெறும் மாணவி ரம்யா, “அரசு தந்த பணத்தை வைத்து எனது அம்மாவுக்குக் காது கேட்கும் கருவி வாங்கித் தந்துள்ளேன். படித்து வேலைக்குச் சென்ற பின் அம்மாவின் காது அறுவைச் சிகிச்சையையும் மேற்கொள்வேன்” என்று சொன்னபோது நேரு அரங்கமே கைதட்டலால் அதிர்ந்தது. அவரது பெற்றோர் எழுந்து நின்றார்கள். அவரது தாய் கதறிக் கதறி அழுதார்.

**‘கணித ஆசிரியை ஆக வேண்டும்’ என்று சொன்ன மாணவியை அழைத்து அவருக்குத் தனது பேனாவைப் பரிசளித்தார் முதலமைச்சர். ‘நான் முதல்வன்’ திட்டத்தால் ஜப்பான் செல்ல உள்ள மாணவி சாலேஜா ஜோன்ஸ், ஜப்பான் மொழியில் பேசி அசத்தினார். ஏழ்மை காரணமாக படிப்பை பாதியில் நிறுத்திய சத்யா என்ற ஒரு தாய், ‘புதுமைப் பெண்’ திட்டத்தின் மூலமாக கல்லூரிக்குச் செல்கிறார். அவரது மகனும் அதே கல்லூரியில் படிக்கிறார். இதுதான் பின்னோக்கியும் சென்று முன்னோக்கி அழைத்து வரும் பாணியாகும்.**

“மாணவர்களாகிய உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு கனவு இருக்கிறது. அந்தக் கனவை நிறைவேற்றுவதற்காக பல திட்டங்களை தமிழ்நாடு அரசு உருவாக்கி இருக்கிறது. அதன் மூலம் பல மாணவர்களின் வாழ்க்கைத் தரம் மாறிக் கொண்டு வருகிறது. மாணவர்களின் கனவை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எனது நன்றிகள்” என்று மனம் திறந்து பாராட்டினார் நடிகர் சிவகார்த்திகேயன்.

‘அரசாங்கமே உங்கள் பக்கமாக இருக்கிறது’ என்றார் இந்திய கிரிக்கெட் வீரர் நடராஜன். வாய் பேச முடியாத, காது கேட்காத தனது மகள் பேட்மிட்டன் விளையாட்டு மூலமாக இன்று பல்வேறு பதக்கங்களைப் பெற்று வர துணை முதலமைச்சர் உதயநிதி அவர்களே காரணம் என்று அந்த மாணவியின் தந்தை சொன்னபோது அதிர்ந்தது அரங்கம். பாரா தடகள வீரர் மனோஜ், தனக்கு துணை முதலமைச்சர் உதயநிதி செய்த உதவிகள் அனைத்தையும் பட்டியலிட்டார். இதுவரை அவருக்கு 48 லட்சம் ரூபாய் ஊக்கத்தொகையாக அரசு வழங்கி உள்ளது. விளையாட்டு வீரர்களுக்கு மிகச் சிறப்பான மாத ஊதியத்துடன்வேலைவாய்ப்புகளைவழங்கிஉள்ளார்துணைமுதலமைச்சர். அதனை பலரும் பெருமையாகச் சொன்னார்கள்.

நான் முதல்வன், தமிழ்ப்புதல்வன், புதுமைப் பெண் திட்டங்களால் பயனடைந்தவர்கள் வரிசையாக வந்து தங்களது வளர்ச்சியைச் சொன்னார்கள். திராவிட மாடல் அரசின் உதவியால் அரசுப் பள்ளியில் படித்து இந்தியாவின் மிகப்பெரிய கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்கள் மொத்தமாக வந்து மேடையில் நின்றார்கள். காலை உணவுத் திட்டத்தால் பயன்பெறும் குழந்தைகள் வந்திருந்தார்கள். அவர்கள் கிச்சடி, பொங்கல், சாம்பார் என ஒவ்வொரு வகையையும் வாழ்த்தினார்கள். காலை உணவுத் திட்டத்துக்குப் பிறகு குழந்தைகளின் உடல் நலம், மனநலம் சீராகி வருவதாகவும், நோய்த் தொற்று குறைந்துள்ளதாகவும் மருத்துவர் அருண்குமார் எடுத்துச் சொன்னார்.

**“கல்வியை நம்மிடம் இருந்து பறிக்கும் வேலை ஒருபுறம் நடந்தாலும், மறுபுறம் அதனை அனைவருக்கும் அளிக்கும் பணியைத் திராவிட மாடல் அரசு செய்து வருகிறது” என்றார் இயக்குநர் வெற்றிமாறன். “உங்களைத் தந்தை போலப் பார்த்துக் கொள்கிறார் முதலமைச்சர்” என்றார் இயக்குநர் மிஷ்கின். “கல்வி மட்டுமே ஏற்றத்தாழ்வுகளைக் களையும். அதனால்தான் இரண்டாயிரம் ஆண்டுகளாக கல்வி தர மறுத்தார்கள். அந்த நிலையை இன்றைய திராவிடக் கருத்தியல் மாற்றி இருக்கிறது” என்றார் இயக்குநர் தியாகராஜன் குமாரராஜா.**

‘முதலாளிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற பல அரசுகள் இருக்கின்றன. குழந்தைகளின் கோரிக்கையை நிறைவேற்றும் அரசாக இது இருக்கிறது’ என்றார் இயக்குநர் தமிழரசன் பச்சமுத்து. ‘பள்ளிக்கூடங்களுக்குள் சமூகநீதி, சமத்துவத்தைக் கொண்டுசெல்லும் அரசு இது. விடுதிகளில் சாதிப் பெயரை நீக்கியதைப் பார்க்கப் பெருமையாக இருக்கிறது.’ என்றார் இயக்குநர் மாரி செல்வராஜ். ‘தமிழ்நாடு பகுத்தறிவுக்கு மட்டுமல்ல, கல்வி அறிவுக்கும் பெயர் பெற்ற மாநிலம்’ என்றார் இயக்குநர் பிரேம்குமார்.

**“இப்படிஒருவரைமுதலமைச்சராகப்பெறுவதற்குநீங்கள்அதிர்ஷ்டக்காரர்கள்” என்று தமிழ்நாட்டு மக்களுக்குச் சொல்லி இருக்கிறார் தெலங்கானா முதலமைச்சர் மாண்புமிகு ரேவந்த் அவர்கள். காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன், நான் முதல்வன் ஆகிய திட்டங்களை தனது மாநிலத்திலும் செயல்படுத்த இருப்பதாக அறிவித்துள்ளார் அவர்.**

“கல்வி மாணவர்களுக்கான சொத்து என்றால், மாணவர்கள் தான் எங்களின் சொத்து” என்றார் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள். இதைவிட இன்றைய இளைய சமுதாயத்துக்கு என்ன வேண்டும்?

**“நீங்க படிங்க, உங்களுக்குப் பின்னால் நான் இருக்கிறேன்” - என்ற முதலமைச்சரின் குரல்தான் தாயின் குரலாக, தந்தையின் குரலாக, ஒரு தலைவரின் குரலாக, முதலமைச்சரின் குரலாக, அறத்தின் குரலாக, அன்பின் குரலாக ஒலித்துக் கொண்டே இருக்கிறது....!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (26.9.2025) சென்னையில் நடைபெற்ற – வேலூர் வி.ஐ.டி. பல்கலைக்கழகத்தின் வேந்தர் ஜி.விஸ்வநாதன் அவர்களின் பேத்தியும் வி.ஐ.டி. பல்கலைக்கழகத்தின் உதவி துணைத் தலைவருமான காதம்பரி எஸ். விஸ்வநாதன் – டாக்டர் ஷ்ரவன் கிருஷ்ணா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வின்போது, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் கே.என்.நேரு, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, டி.ஆர்.பி.ராஜா உள்பட பலரும் உடன் உள்ளார்கள்.

## மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை நாளும் நடைமுறைப்படுத்தும்

# ‘திராவிட மாடல்’ அரசு - 2026 தேர்தலிலும் அமோக வெற்றி பெற உறுதியேற்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு – இனமானப் பேராசிரியரின் புதல்வர் அ.அன்புச்செல்வன் கடிதம்!

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, இனமானப் பேராசிரியர் அவர்களின் புதல்வர் அ.அன்புச் செல்வன் நேற்று முன்தினம் எழுதியுள்ள கடிதம் வருமாறு:-**



அன்பு நண்பர் முதல்வர் ஸ்டாலின் அவர்களுக்கு,

இனிய வணக்கம்.

’கல்வியில் சிறந்த தமிழ்நாடு’ விழாவினை தெலுங்கானா முதலமைச்சர் ரேவந்த் ரெட்டியைக் கொண்டு நடத்தியமைக்கு மிகுந்த பாராட்டுகள்!.

நிகழ்காலத் தமிழர்க்கு ஏற்றம் தரும் திட்டங்களைப் போல கல்விக்குச் செயல்படுத்தப்படும் திட்டங்கள், வளமான தமிழகத்தை உருவாக்கும் பெரும் முயற்சியாகும்.

இப்பெரும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இரு அமைச்சர்களுக்கும், உங்களது மேலான ஆலோசனையை ஏற்று நிதி ஒதுக்கீடு செய்யும் நிதி அமைச்சருக்கும் இனமானப் பேராசிரியர் இல்லத்து வாழ்த்துகள்! பாராட்டுகள்!

கடந்த 70 ஆண்டுகளில் கல்வி போன்ற சமூக முதலீடுகளில் கவனம் செலுத்தியதன் மூலமே தமிழ்நாடு வளர்ந்த மாநிலமாக முன்னேறியுள்ளது.

“கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு மாடல்ல மற்றை யவை” எனும் திருக்குறள் வழிக் கல்விக்கு நிதிநிலை அறிக்கையில் அதிக முதலீடு செய்வதற்குப் பாராட்டுகள்!.

“ஒருவருக்கு அழியாத சிறந்த செல்வம் கல்வியே!” என்றும், “கல்வி தவிர மற்ற பொருட் செல்வங்கள் யாவும் சிறந்த செல்வம் ஆகாது” என்றும் கூறுகிறது குறள். கல்வி மட்டுமே நிலையான, அழியாத செல்வமாகும்; மற்ற செல்வம் யாவும் நிலையற்றது என்பதே இக்குறளின் கருப்பொருள்.

**“மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு” என்பார் தந்தை பெரியார், தமிழகத்தை வஞ்சிக்கும் ஒன்றிய அரசுடன் திராவிட இயக்கத்தின் மூலக் கொள்கைகளுக்கு எவ்வித பங்கமும் ஏற்படாமல் சிறிதும் அச்சப்படாமல், துணிச்சலுடன் தமிழக மக்களின் தன்மானத்தைக் காப்பவர் தாங்கள். இத்தகைய கொள்கைப் பிடிப்பும், அதனால் ஏற்படும் துணிவும், செம்மொழி நாயகரான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முதன்மைத் தொண்டரான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினான தங்களது ரத்த அணுக்களிலும் நிறைந்து வெளிப்படுவது இயல்பே!**

அறிவை வளர்ப்பதில் கல்வியின் பங்கு அளப்பரியது. கடந்த 70 ஆண்டுகளாக கல்வியை பரவலாக எல்லோரும் எளிதில் கற்க கண்ணும் கருத்துமாக இயங்குவது திராவிட இயக்கம்.

அறிவுசார் பொருளாதாரத்தை நோக்கி வேகமாக தமிழ்நாடு நகர்கிறது. அதற்கேற்ப மாணவர்களின் கல்வித்தரம் மாற்றலுக்குத் தயாராகும் வகையில் பாடத்திட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வந்து, நவீன தகவல் தொழில் நுட்பங்களின் அடிப்படையில் கற்பித்து, மாணவர்கள் சுயமாகக் கற்க உயர் நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 22,931 திறன் மிகு வகுப்பறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

நம் மாநிலத்தின் கல்வி வளர்ச்சி மற்றும் எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ப தமிழகத்திற்கு என்று தனித்துவமான கல்விக் கொள்கையை வகுக்க கல்வியாளர்கள் மற்றும் வல்லுநர்களைக் கொண்ட குழு அமைத்து தமிழகத்திற்கு என்று தனித்துவமான கல்விக் கொள்கைகளை அறிமுகப்படுத்தியதை வரவேற்கின்றேன்!. காலத்தின் தேவையறிந்து எடுக்கப்பட்ட சீரிய நடவடிக்கை இது!.

**‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்’ வெற்றியானது இன்று இந்தியா முழுவதும் பேசும் பொருளாகியுள்ளது. இந்திய மாநிலங்கள் மட்டுமல்ல; கனடா, இந்தோனேஷியா போன்ற உலக நாடுகளும் இத்திட்டத்தை அமல்படுத்தத் திட்டமிடுகின்றனர், அந்த அளவுக்கு இத்திட்டம் வெற்றி பெற்றுள்ளது என்றால், அது மிகையல்ல.**

இடைநிலைக் கல்வி, பள்ளிக்கல்வி, கல்லூரிக் கல்வி, பொறியியல், மருத்துவம், விவசாயக் கல்வி, சட்டப் படிப்பு, கால்நடை மருத்துவம் என அனைத்து உயர் கல்விகளிலும் உச்சநிலையை எட்டியுள்ளது திராவிட மாடல் அரசு.

இத்தகைய கல்வி பயின்றவர்கள் அவர்தம் திறனையும் மேம்படுத்தினால் அவர்கள் வாழ்வில் முன்னேற முடியும் என்பதனால்தான் ‘நான் முதல்வன்’, ‘தமிழ்ப் புதல்வன்’, ‘புதுமைப்பெண்’ உள்ளிட்ட 7 திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறீர்கள்.

நாட்டிற்கே முன்னோடியாக விளங்கும் இவ்வியத்தகு திட்டங்கள் பல நல்ல விளைவுகளை ஏற்படுத்தி உள்ளது, சில புள்ளி விவரங்கள் இத்திட்டத்தின் வெற்றிக்குச் சாட்சியாக விளங்குகிறது.

2.57 லட்சம் குழந்தைகள் இந்த ஆண்டு ‘தமிழ்ப் புதல்வன்’ மற்றும் ‘புதுமைப்பெண்’ திட்டத்தில் பயன்பெற உள்ளனர்.

14.60 லட்சம் பேர் ‘நான் முதல்வன்’ திட்டத்தில் கலந்து கொண்டு அவர்களுக்கு 41 லட்சம் திறன் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது.

500க்கும் மேற்பட்ட திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டங்களால் ஆண்டுக்கு 1 லட்சம் பேருக்குக் கூடுதலாக அவர்கள் பயிலும் வளாகத்திலேயே பன்னாட்டு நிறுவனங்கள் மூலம் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வேலை வாய்ப்புகள் கிட்டியுள்ளது.

**2026-ஆம் ஆண்டு ‘திராவிட மாடல் 2.0’ ஆட்சியில் கல்வியை ஒத்திசைவுப் பட்டியலில் (Concurrent list) இருந்து மீட்டு மீண்டும் மாநிலப் பட்டியலுக்கு (State List) கொண்டுவரும் சட்டப் போராட்டங்களையும் முன்னெடுக்க வேண்டுமெனவும் கோருகிறேன்.**

மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை நாளும் அமல் படுத்தும் திராவிட மாடல் அரசு, 2026 சட்டமன்றத் தேர்தலிலும் அமோக வெற்றி பெற உறுதியேற்போம்!.

**ஓரணியில் தமிழ்நாடு!**
**தமிழ்நாட்டைத் தலைகுனிய விட மாட்டோம்!**
**படைப்போம் வரலாறு!**
**வளர்க தங்கள் தமிழர் தொண்டு!**
**வெல்க திராவிட மாடல் அரசு!**
**வளர்க தி.மு.க.!**

இவண்,
**அ. அன்புச்செல்வன்**
26.09.2025

இவ்வாறு அக்கடிதத்தில் அ.அன்புச் செல்வன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.